சென்னை–6, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன
இயக்குநரின் செயல்முறைகள்
முன்னிலை: ந.லதா,

ப.மு. எண்.6477/அ1/2023, நாள். 16.02.2024.

பொருள் பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – சென்னை–6, தொடக்கக் கல்வி இயக்ககத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து, பணிக்காலத்தில் 20.0.1.2002 அன்று காலமான அரசு ஊழியர் திரு.முகமது சாலர் என்பவரின் வாரிசுதாரர் திருமதி.எம்.எஸ்.வகீதா, இளநிலை உதவியாளர் என்பவருக்கு 03.10.2018 பிற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல்– சார்ந்து.

பார்வை
1. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) கடிதம் ந.க.எண்.487/ஜே/இ4/ 2018 நாள் 03.10.2018.
2. அரசாணை நிலை எண் 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ1) துறை நாள் 26.02.2021.
3. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) கடிதம் ந.க.எண்.20207/ஜே/இ4/ 2021 நாள் 10.04.2021.
4. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்கக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.3925/அ2/2022 நாள் 18.11.2022.
5. இந்நிறுவன இணை இயக்குநரின் (நிருவாகம்) கடித எண். 6477/ அ1/ 2023 நாள் 03.07.2023
6. பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) கடிதம் ந.க.எண்.00836/ஜே/இ4/2022 நாள்22.10.2022 மற்றும் 15.09.2023.
7. பள்ளிக்கல்வி செயலரின் கடித எண் 1308/ப.க.4(1)/2023–1 பள்ளிக் கல்வித் துறை நாள் 06.11.2023
8. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண் 41477/ஜே/இ1/ 2022 நாள் 15.12.2023.

......

சென்னை–6, தொடக்கக் கல்வி இயக்ககத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து, பணிக்காலத்தில் 20.0.1.2002 அன்று காலமான அரசு ஊழியர் திரு.முகமது சாலர் என்பவரின் வாரிசுதாரர் திருமதி.எம்.எஸ்.வகீதா என்பாருக்கு பார்வை 1–ல் கண்டவாறு சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமன ஆணை வழங்கப்பட்டு 03.10.2018 பிற்பகல் முதல் இளநிலை உதவியாளராக சென்னை–6, மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககத்தில் பணிநியமனம் பெற்று பணியில் சேர்ந்து,10.10.2022 முற்பகல் முதல் இந்நிறுவனத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 8–ல் காணும் பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதத்தில், "அரசாணை நிலை எண் 48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்(க்யூ1) துறை, நாள் 26.02.2021 பத்தி எண் (5.1)–ல் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து அலுவலர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படும் என்றும், மேலும் பத்தி(5.2)ல் பத்தி எண் (5.1)ன் ஆணையினை செயல்படுத்த சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒருநிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One Level higher than the appointing authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப்பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட உரிய

செயல்முறை ஆணை வெளியிட்டு, தொடர்புடைய அரசுப் பணியாளர்களின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என தெரிவித்து ஆணை வெளியிடப்பட்டிருந்தது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"தற்போது, பார்வை 7ல் கண்ட பள்ளிக்கல்வி செயலரின் அரசு கடித எண் 1308/ப.க.4(1)/2023-1 பள்ளிக் கல்வித் துறை நாள் 06.11.2023ன்படி "கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட தனியர்களின் பணியினை வரன்முறை செய்திட அரசாணை நிலை எண்.100 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத்துறை நாள் 01.08.2018ன்படி "தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு பெற தேவையில்லை" என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், "இனி வருங்காலங்களில் கருணை அடிப்படையில் பணி நியமனங்களில் **விதித் தளர்வு இல்லாத நேர்வுகளில்** இளநிலை உதவியாளர் பதவியில் **உரிய அலுவலர் நிலையில்** பணிவன்முறை செய்தபின் அரசளவில் பதிவு செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை." என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பார்வை 8-ல் காணும் பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதத்தின்படி தனியருக்கு கீழ்க்கண்டவாறு அவரது பெயருக்கு எதிரே கலம் 4ல் உள்ளவாறு கீழ்க்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண் | பெயர்/ பதவி<br>பணிப்புரியும் அலுவலகம் | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திருமதி எம்.எஸ்.வகீதா<br>இளநிலை உதவியாளர்,<br>மாநிலக்கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை-6 | 03.10.2018 பிற்பகல் | 03.10.2018 பிற்பகல் |

நிபந்தனைகள்:

1. சார்ந்த பணியாளர் தனது தகுதிகாண் பருவத்தினை தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் ஈராண்டு பணிக்காலம் நிறைவு செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கலாகிறது.
2. இரண்டாண்டு பணிக்காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.
3. இரண்டாண்டு பணிக்காலத்திற்குள் பவானிசாகர் பயிற்சிநிறைவு செய்யப்படவேண்டும்.
4. இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்த பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் வழங்க இயலும்.

மேலும், அன்னாரின் பணிப்பதிவேட்டில் பணிவரன்முறை சார்பான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன எனச் சான்றளிக்கப்படுகிறது.

இயக்குநர்.

19/2/24

பெறுநர்
திருமதி எம்.எஸ்.வகீதா.
இளநிலை உதவியாளர்,
மாநிலக்கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,சென்னை-6.

நகல்: 1. ஆ பிரிவு கண்காணிப்பாளர்.
2. உபரி-1